செ.வெ.எண்.385/2021 நாள்.10.09.2021

# திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் 12.09.2021 அன்று நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் 12.09.2021 அன்று நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். அதனை தொடர்ந்து ஆம்பூர் உமர் சாலை நகராட்சி துவக்கப்பள்ளியில் நடைபெற்றவரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் 12.09.2021 அன்று நடைபெறுவதையொட்டி முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆம்பூர் வட்டத்திற்குட்பட்ட 92 வாக்குச்சாவடி மையங்கள் நகரம் மற்றும் கிராம பகுதிகளில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் அமைக்கப்படவுள்ளது. நாளைக்கு வாக்குச்சாவடிமைய அளவிலான அலுவலர்களுக்கும் ஊராட்சி செயலாளர்களுக்கும் மற்றும் தன்னார்வளர்களுக்கும் பயிற்சி கூட்டம் நடத்தப்பட வேண்டும் என வட்டாட்சியர் அவர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி செயலாளர்கள் அனைவரும் அவர்களின் ஊராட்சியில் உள்ள பொது மக்கள் அனைவரையும் யாரும் விடுப்படாமல் இந்த மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும்.

மேலும் ஆம்பூர் நகராட்சிற்குட்பட்ட வார்டுகளில் 21 ஆயிரம் வீடுகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று பொது மக்கள் அனைவரையும் இந்த மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமில் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்திகொள்ளுமாறு அறிவுறை வழங்கப்பட வேண்டும் என ஆம்பூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் வருகின்ற 12.09.2021 அன்று நடைபெறவுள்ள மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை பயன்படுத்திகொண்டு கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். நமது மாவட்டத்தில் உள்ள அனைவரும் 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டு திருப்பத்தூர் மாவட்டத்தை கொரோனா இல்லாத மாவட்டமாக மாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர் திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது வட்டாட்சியர் திரு.அனந்தகிருஷ்ணன், நகராட்சி ஆணையர் திரு.ராஜேந்திரன், துணை வட்டாட்சியர் திரு.குமரவேல், செவிலியர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.**